சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No. 85/2022

பெயர் திரு. அந்தோணிராஜ் நாள்.16.02.2026
த/பெ.பாபு

**<u>பிரதிவாதி சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) வழக்கு சொத்து புல எண்.166/1ல் 65.5 செண்ட் என்றால் சரிதான். புல எண் 166/1A2 ல் 33.5 ெ ஹக்டர் மற்றும் வழக்கு சொத்தும் இன்னாசியப்பன் மற்றும் ராயப்பன் ஆகியோரின் பூர்விக சொத்துகள் என்றால் சரிதான். ராயப்பன் திருமணமாகாமல் இறந்து விட்டார் என்றால் சரியல்ல, திருமணமாகி வாரிசுகள் ஏதும் இன்றி இறந்து விட்டார். அவருடைய மனைவியும் இறந்து விட்டார். இன்னாசியப்பன் தான் ராயப்பனின் இரண்டாம் நிலை வாரிசு என்றால் சரிதான். இன்னாசியப்பனும், அவருடைய மகன் பாபுவும் 65.5 செண்ட் நிலத்தை வா.த.சா.ஆ.2 நிலைக்கு எழுதிக் கொடுத்தது உண்மை என்றால் சரிதான். அதில் புல எண்.162/1A என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் கண்டுள்ள நான்கு எல்கைகள் சரியானவை தான். வா.த.சா.ஆ.2ல் கண்டவாறு தான் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த நான்கு எல்கைகள் புல எண். 166/1 ன் கீழ் வருகிறது என்றால் சரிதான். வழக்கு சொத்தின் ஒரு பகுதியில் கால்வாயும், மற்ற மூன்று திசைகளிலும் வாதிகளின் நிலம் உள்ளது என்றால் நான்கு புறமும் வாதிகளின் நிலம் தான் உள்ளது. வழக்கு சொத்தில் கிணறு உள்ளது

என்றால் இல்லை. வாதிகளின் நிலத்திற்கு அருகிலும் கிணறு உள்ளது என்றால் இல்லை. பத்து நிலங்கள் தள்ளி கிணறு உள்ளது. அந்த கிணற்றில் இருந்து தான் வழக்கு சொத்து சுற்றி உள்ள வாதிகளின் நிலத்திற்கு குழாய் மூலம் நீர் இறைத்து விடப்படுகிறது என்றால் சரிதான்.

2) வழக்கு சொத்து மற்றும் அதை சுற்றி உள்ள சொத்துகளில் வாதிகள் என் எல் ஆர் பயிர் வைத்துள்ளனர் என்றால் சரிதான். 1985 முதல் வாதிகள் தான் அவ்வாறு பயிர் வைத்து வருகிறார்கள் என்றால் சரிதான். 1985ல் என் தாத்தா மற்றும் அப்பா ஆகியோர் மரியன்னையிடம் அடமானம் வைத்த வகையில் பயிர் செய்து வருகிறார்கள். அந்த அடமானத்ததை வாதிகளின் முன்னோரான ஆரோக்கியசாமி மற்றும் லூர்துசாமி ஆகியோர் பைசல் செய்தனர் என்றால் எங்களுக்கு தெரியாமல் பைசல் செய்தனர். அதற்கான தொகையை நாங்கள் ஏதும் தரவில்லை என்றாலும், அவர்கள் தான் கொடுத்தார்கள் என்றாலும் சரிதான். நானும், என் தகப்பனாரும் அந்த அடைமானத்தைப் பைசல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். அவ்வாறு எங்களை அறியாமல் அடைமானத்தைப் பைசல் செய்ததாக எதிர் வழக்குரை மற்றும் முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் வழக்கறிஞரிடம் சொல்லியுள்ளேன். என் தகப்பனாருடன் பிறந்த சகோதரிகள் உள்ளனர், அவர்கள் பெயர் எனக்கு தெரியாது. சூசை மேரி என்பவர் என்னுடைய தாயார்.

3) சூசை மேரி, அமலா ஜோஸ்வின் மற்றும் சகாய ராஜ் ஆகியோர் எனக்கு விடுதலை ஆவணம் எழுதி கொடுத்துள்ளனர். வாதிகள் புல எண் மாறியுள்ளதாக வழக்கு தாக்கல் செய்துள்ளனர். எனவே புல எண் மாறியுள்ளது உண்மையா என்றால் தவறு. என் அப்பா மற்றும் தாத்தா ஆகியோர் வாதிகளுக்கு கிரையம் கொடுத்த 65.5 செண்ட் கொடுக்க வேண்டும் என்றால் சரிதான். அந்த நான்கு எல்கைகளில் தான் சொத்து கொடுக்க வேண்டும். வா.த.சா.ஆ.2 ல் கண்டுள்ள நான்கு எல்கைகள் போட்டு தான் எனக்கு பி.த.சா.ஆ.1ன் கீழ் விடுதலை ஆவணம் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். விடுதலை ஆவணம் குறித்து 4ம் வாதி என்னிடம் பேசினாரா என்றால் பேசினார். அவ்வாறு பேசியதற்கு நான் 4ம் வாதியிடம் தொகையை கொடுத்து விட்டு, சொத்தை எடுத்துக் கொள்ளுமாறு கூறினேனா என்றால் இல்லை. வா.த.சா.ஆ.2 எழுதிக் கொடுத்து விட்டு பி.த.சா.ஆ.1 எழுதியது தவறு என்றால் சரியல்ல. எனவே வாதிகளுக்கு நாங்கள் திருத்தல் பத்திரம் எழுதிக் கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. பி.த.சா.ஆ.1 ஆவணம் செல்லாது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு செலவுத் தொகையுடன் தீர்ப்பாக வேண்டுமென்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**